*கவனிக்க.-2021.12.17 ஆந் திகதிய 2259 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* I: *தொகுதி* III *பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2260 - 2021 දෙසැම්බර් මස 24 වැනි සිකුරාදා - 2021.12.24

*2260ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 1050 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 1053 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2022, சனவரி மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, திசெம்பர் மாதம் 31ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1049 - B 082299 - 353 (2021/12)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

இணைப்பு 9

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மேல் மாகாண சபையின் களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள புலத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் பஹலகே ரங்கன பிரசாத் பெரேரா ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின்19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1996.12.20 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள களு/ பிர/ புல/ 3136 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான புலத்சிங்கள , பரகொட எனும் முகவரியில் வசிக்கும் வெல்கம கேவாகே சார்லிச் அப்புகாமி என்பவருக்கு கையளிக்கப்பட்டு மதுகம மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல்.டீ.ஓ. 69/23 ஆம் இலக்கத்தின் கீழ் 1997.06.18 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அவற்றை 2022.01.21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

### அட்டவணை

*களுத்துறை நிர்வாக மாவட்டத்தில் புலத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவின் கங்கபட பற்றில் /கோரளையிலுள்ள 825ஏ - பரகொட கிழக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பரகொட எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட அ.க.சி. 149 இரேகை வரைதலில் 249 பீ (504) பகுதி இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 01 ஏக்கர், 02 றூட் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு: ஷீன்பன்தல மூகலான.*

*வடக்கு : பீ தர்மவதீ என்பவரால் அனுபவிக்கும் காணி*
*கிழக்கு : பீ. எச். பொடி சிங்ஞோ அனுபவிக்கும் காணி;*
*தெற்கு : அருவி வனப்பகுதி;*
*மேற்கு : டீ.வீ. ஓபட் அனுபவிக்கும் காணி.*

*பீ. ஆர். பிரசாத் பெரேரா,*
*பிரதேச செயலாளர்,*
*புளத்சிங்கள.*

*பிரதேச செயலகம்,*
*புளத்சிங்கள.*

*12- 582*

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மேல் மாகாண சபையின் களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள புலத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் பகலகே ரங்கன பிரசாத் பெரேரா ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின்19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1986.06.12 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள களு/ பிர/ 8651 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான புலத்சிங்கள , மீகஹகும்புர எனும் முகவரியில் வசிக்கும் ரணவக்க ஆரச்சிகே கரோலிச் சிங்ஞோ என்பவருக்கு கையளிக்கப்பட்டு மதுகம மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல்.டீ.ஓ. 23/144 ஆம் இலக்கத்தின் கீழ் 1991.03.19 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச்*

சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அவற்றை 2022.01.21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

களுத்துறை நிர்வாக மாவட்டத்தில் புலத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவின் கங்கபட பற்றில் / கோரளையிலுள்ள 822- போதலே கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த திவலகடை எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அ.க.சி. 146 இரேகை வரைதலில் 481 1/2ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 01 ஏக்கர், 02 றூட் , 29 பேர்ச் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு: கலுகல் கந்தை.

வடக்கு : அ.க.சி. 146 லொட் 480;
கிழக்கு : அ.க.சி. 146 லொட் 482;
தெற்கு : அ.க.சி. 146 லொட் 484;
மேற்கு : அ.க.சி. 146 லொட் 481.

பீ. ஆர். பிரசாத் பெரேரா,
பிரதேச செயலாளர்/ பிரதிக்காணி ஆணையாளர்,
புளத்சிங்கள.

பிரதேச செயலகம்,
புளத்சிங்கள,
2021.04.23.

12- 583

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

சப்பிரகமுவ மாகாண சபையின், இரத்தினபுரி மாவட்டத்தின் எலபாத்த பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கிடையிலான) சப்புதன்திரிகே அனுருத்திகா தில்ருக் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதியுத்தமாராம் சனாதிபதி அவர்களால் 1995 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இர/ பிர/ 19115 ஆம் இலக்கமுடைய அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான கெஹெல் ஓவிட்டிகம என்னும் கிராமத்தில் வதியும் மாஹிராகல துரயலாகே தனசிறி என்வரிடம் வழங்கப்பட்டு, இரத்தினபுரி மாவட்ட காணிப்பதிவகத்தில் ஜயபூமி கா.அபி. 14/ 259 ஆம் இலக்கத்தின் கீழ் 1995.11.17 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு அடுத்து வருபவர் ஒருவராவதற்கு சட்டரீதியில் உரிமையுள்ளவர்கள் எவரும் இல்லாதமையினால் அல்லது உரிமையுள்ள ஒருவர் இருந்தபோதிலும் அவர் அடுத்து வருபவர் ஒருவராக விருப்பம் தெரிவிக்காமையின் காரணமாக அடுத்து வருபவர் ஒருவராக நியமனமாவதற்கு எவரும் இல்லையென அறிக்கையிடப்பட்டுள்ளமையினரில் மேற்கூறிய அளிப்புப் பத்திரம் மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறிவிக்கின்றேன். இவ்விடயம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் அவற்றை 2022.01.28 ஆந் திகதிக்கு முன் எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

இரத்தினபுரி நிருவாக மாவட்டத்தில், எலபாத்த பிரதேச செயலாளர் பிரிவில் , பல்லேபத்துவையில், கெஹெல்ஓவிட்டிகம கிராம அலுவலர் பிரிவில், கெஹெல் ஓவிட்டிகம என்னும் கிராமத்தில் அமைந்துள்ள மு.கி.ப. இல.59 இல் லொட் இல. 152 இன் ஒரு பகுதி எனக் காட்டப்பட்டுள்ள அளவில் 02 றூட் விஸ்தீரணமுடைய கீழ்க் காட்டப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அமைந்துள்ள பொலொன் ஹேன்யாய என்னும் அரசாங்கக் காணி (துரைக் காணி).

வடக்கு : எம். உக்கு ஹத்தனா என்பவரின் கா.அபி.க. 287/ 4760 (அரசாங்கக்) காணி;
கிழக்கு : டிங்கிரி மஹத்மய என்பவரின் கா.அபி.க. 61/ 538 (அரசாங்கக்) காணி;
தெற்கு : பத்தாதெனிய அருவி பாதுகாப்புக் காணி;
மேற்கு : பீ. எச். கிரிமெனிக்கே என்பவரின் இர/ பிர/ தெ/ 92 வருடாந்த அனுமதிப்பத்திரக் ( அரசாங்கக்) காணி.

எஸ். ஏ. தில்ருக்,
பிரதேச செயலாளர்,
எலபாத.

பிரதேச செயலகம்,
எலபாத,
2021.07.22.

12- 579/1

---

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) இன் கீழ் வழங்கப்பட்ட அளிப்புகளை பிரிவுஆவது 104 இன் கீழ் இரத்துச் செய்தல்**

அதிஉத்தமராம் சனாதிபதி அவர்களினால் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவுக்கேற்ப 1997 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி ஹத்தெல்ல எகோட இல் வசிக்கும் ஹல்லின்ன காங்கானமலாகே சன்தோஸஹாமி என்பவருக்கு ரத்/ பி/ 44767 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பாரதீனம் செய்யப்பட்டு இரத்தினபுரி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1998.11.11 ஆந் திகதி இலக்கம் இ.ச. 16/1776 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணியை சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால் இருக்கும் பின்னுரிமை வாரிசு கோர விரும்பவில்லை என சப்பிரகமுவ மாகாண சபைக்குட்பட்ட ஒப்பநாயக பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் லக்ஷிகா மிகேல்ஆராச்சி ஆகிய நான், இத்தால் அறியத்தருகிறேன், ஆதலால் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் மேற்கூறிய அளிப்பை இரத்துச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2022.01.28 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ---- ஆம் வெளிக்களத் தாளின் பிரகாரம்------ அவர்களினால் தயாரிக்கப்பட்ட ----- இலக்கத் துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து -----என்பவரினால் நிர்மாணிக்கப்பட்ட அ.க.சி. 267 ஆம் இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 09 எனக் காட்டப்பட்டுள்ளதும் இரத்தினபுரி நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட ஒப்பனாயக பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த ஹெலபல்லபத்துவெ பற்று/ கோரளையிலுள்ள ஹத்தெல்ல எகோட எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 02ஏக்கர் 03 றூட் 34பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான ராஜசன்தக கெலே முகலான அரச காணி.

வடக்கு : G. சியனேரிச் என்பவரின் கொலனி இடம்;
கிழக்கு : மைத்திரிஹாமிகே கொலனி இடம்;
தெற்கு : பனங்கந்த ரக்ஷிதய;
மேற்கு : ஆரியதாசகே கொலனி இடம்.

லக்ஷிகா மிகேல்ஆராச்சி ,
பிரதேச செயலாளர்,
ஒபநாயக்க.

பிரதேச செயலகம்,
ஒபநாயக்க,
2021.07.19.

12- 579/2

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/59068.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. :CPC/ LC/ LD/41/14/270.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கண்டி மாவட்டம்,உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தெல்பிடிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஸ்டொபில்ட் வத்தை எனும் கிராமத்தில் அமைந்துள்ள C.M. 320164 லினால் வரையப்பட்ட வரைபடத்தில் இல. 3:587 காணித்துண்டில் ஒரு பகுதி காட்டப்பட்டுள்ளதும் 10 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரசகாணியின் ஒரு பகுதி ஜயசேகர முதியன்சேலாகே அனுஷா காஞ்சனா மெனிகே என்பவருக்கு வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு விண்ணப்பித்திருப்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இல. 587 இன் மிகுதிப் பகுதி;
கிழக்கு : காணித்துண்டு இல. 589 இன் மிகுதிப் பகுதி;
தெற்கு : காணித்துண்டு இல. 589 இன் பகுதி மற்றும் வீதி ஒதுக்கம்;
மேற்கு : கம்பளை - நுவரெலியா வீதியின் ஒதுக்கம்.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் அங்கீகரித்த 2021.08.10 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2021 ஆம் ஆண்டுக்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியில் 2% மாண்புமிகு அமைச்சர் அனுமதித்த வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூ.5,000,000) அதிகாமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அபிவிருத்தியடையாத பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபட வேண்டும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்படும் குத்தகைப் பணத்தின் 20% வட்டி வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

*தவணைப்பணம்*.- செலுத்தப்படல் மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படக் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர் இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2021.08.10ஆந் திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க் குத்தகைக்கு விடுவதற்கோ அல்லது சபைக்குள் கைமாற்றம் செய்வதற்கோ அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தை முறையாகச் செலுத்த வேண்டும். பணத்தை செலுத்துவதில் குறைபாடு இருந்தால் ஒப்பந்தம் தானாகவே காலவதியாகிவிடும். குத்தகைக் கட்டணத்தை முறையாகத் தொடாராத பட்சத்தில் நிலுவையிலுள்ள குத்தகைக்கு வட்டியில் 10% அபராதம் விதிக்கப்படும்;

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக் குத்தகை வழங்கப்படும்.

பி.ஜீ.கே.ஆர்.கே.புலனவேவ,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, திசெம்பர் 08.

12- 580

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/36649.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. :என்சிபி/பிஎல்சி/
எல்05 /20/04.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், மாவிலச்சிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல.372,துப்பிட்டியாவ கிராம அலுவலர் பிரிவைச்சேர்ந்த துப்பிட்டியாவ எனும்கிராமத்தில் அமைந்துள்ள சுவட்டு வரைபடத்தில் இலக்கம் 02 காணித்துண்டு 3162 எனக் காட்டப்பட்டுள்ள 4.0475 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை விவசாய நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு திரு.பண்டாரநாயக்க முதியன்சேலாகே காமினி செனரத் பண்டார என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 3163;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 3163;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 3163;
மேற்கு :காணித்துண்டு இலக்கம் 3163.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2021.11.08 ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை**.- 2021 ஆம் ஆண்டுக்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியில் 2% மாண்புமிகு அமைச்சர் அனுமதித்த வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூ.5,000,000) அதிகாமாக இருக்கும்சந்தர்ப்பத்தில் அபிவிருத்தியடையாத பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபட வேண்டும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்படும் குத்தகைப் பணத்தின் 20% வட்டி வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

*தவணைப்பணம்*.- அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மாகாணக் காணி ஆணையாளர் / பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்பதியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும் ;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2021.11.08 ஆந் திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க் குத்தகை அல்லது கைமாற்றம் மட்டுமே அனுமதிக்கப்படும்;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும் அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக் குத்தகை வழங்கப்படும்.

ஏ.கே.ஏ. செவ்வந்தி அமரசேகர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021.11.30.

12- 581

*காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/63922.*
*மாகாணக் காணி ஆணையாளரின் இல. :என்சிபி/பிஎல்சி/ எல்11/04/பளு/2019 .*

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், கிழக்கு பளுகஸ்வெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல.589, ஹபரண கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஹபரண எனும் கிராமத்தில் அமைந்துள்ள காணி அலுவலரினால் வரையப்பட்ட சுவட்டு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ள 01 ஏக்கர் 03 றூட் 1.38 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு தணவீர ஆரச்சகே பாலித குணரத்ன என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : மரதண்கடவல பிரதான வீதிக்கான ஒதுக்கு;
கிழக்கு : டி.எம்.சந்திரலதா என்பவரின் காணி;
தெற்கு :வன ஒதுக்கு அரச காணி;
மேற்கு : டபிள்யு. சி. பிரியங்கிகா சுஜிவா அபேசிங்க என்பவரின் காணி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2021.05.11 ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை**.- 2021 ஆம் ஆண்டுக்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியில் 2% ஆகும். 2021 ஆம் வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூ.5,000,000) அதிகாமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் 2021 ஆம் வருடத்திற்கான பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபட வேண்டும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்படும் குத்தகைப் பணத்தின் 20% வட்டி வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

*தவணைப்பணம்.-* அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மாகாணக் காணி ஆணையாளர் / பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக கருத்திட்ட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும் ;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2021.05.11 ஆந் திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க் குத்தகை அல்லது கைமாற்றம் மட்டுமே அனுமதிக்கப்படும்;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும் அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக் குத்தகை வழங்கப்படும்.

ஏ.கே.ஏ. செவ்வந்தி அமரசேகர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021.12.24.

12- 632

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/65951.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. :என்சிபி/பிஎல்சி/எல்2 /தீகாப.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், மத்யம நெகனயிர நுவரகம் பலாத பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல.313, மரதண்கடவல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மரதண்கடவல எனும் கிராமத்தில் அமைந்துள்ள காணி அலுவலரினால் வரையப்பட்ட சுவட்டு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ள 02 ஏக்கர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை விவசாய நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு திரு. ஹேரத்கே நளின் அநுருத்த என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : எம். எஸ். பி.ஹெகொட ஆரச்சி என்பவரின் காணி;
கிழக்கு : அண்டுகெட்டியாவ வீதி ஒதுக்கு;
தெற்கு : துணைப்பாதை;
மேற்கு : ஓ. எம். கரவிட்ட என்பவரின் காணி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2021.03.25 ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை**.- 2021 ஆம் ஆண்டுக்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியில் 2% மாண்புமிகு அமைச்சர் அனுமதித்த வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூ.5,000,000) அதிகாமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அபிவிருத்தியடையாத பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபட வேண்டும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்படும் குத்தகைப் பணத்தின் 20% வட்டி வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

*தவணைப்பணம்*.- அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மாகாணக் காணி ஆணையாளர் / பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்பதியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி பழச்செய்கைக் கருத்திட்ட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும் ;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) மாண்புமிகு அமைச்சர் அனுமதித்த திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க் குத்தகை அல்லது கைமாற்றம் மட்டுமே அனுமதிக்கப்படும்;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும் அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக் குத்தகை வழங்கப்படும்.

ஏ.கே.ஏ. செவ்வந்தி அமரசேகர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021.12.24.

12- 633

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/18960.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. :என்சிபி/பிஎல்சி/2004/5/10/4.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், பளுகஸ்வெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல.60, கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பளுகஸ்வெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள எப்ரிபி 846 ஆம் இலக்க காணி வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ள 12 றூட் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிட நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு திருமதி முதியன்சேலாகே இந்திரா திலகராணி என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : எப்விபி 846;
கிழக்கு : எப்விபி 846;
தெற்கு : எப்விபி 846;
மேற்கு : கெக்கிராவ -ஹபரண பிரதான வீதி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை**.- 1995 ஆம் ஆண்டுக்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட அபிவிருத்தி அடையாத பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மாகாணக் காணி ஆணையாளர் / பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்பதியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட கருத்திட்ட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும் ;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 1995.06.15 ஆந் திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை குடும்பத்தினுள் சாட்டப்படுதல் அல்லது இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க் குத்தகை அல்லது சாட்டுதல் மட்டுமே அனுதிக்கப்படும் இந்தக் குத்தகைக்கான அளிப்புப் பெறும் உரிமை 1995இலிருந்து 5 வருடங்களின் பின்பு கிடைக்கும்;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும் அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக் குத்தகை வழங்கப்படும்.

ஏ.கே.ஏ. செவ்வந்தி அமரசேகர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021.12.07.

12- 605

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.